# கீழக்கரை நகர்மன்ற 11.12.2020—ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

**பொருள் —1**

கீழக்கரை நகராட்சிப் பொது மக்களுக்கு மாலாங்குண்டு குடிநீர் ஏற்றும் நிலையம், சேதுக்கரை குடிநீர் ஏற்றும் நிலையம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் பெறப்படும் குடிநீர் இந்நகர் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படும் பொழுது குடிநீர் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு, குடிநீர் வீணாக சாலையில் வெளியேறுகிறது. அதனை உடனடியாக பழுதுநீக்கப் பணிகள் செய்ய வேண்டியுள்ளது. இந்நகராட்சியில் ஒரே ஒரு குடிநீர் குழாய் பொருத்துநர் பணியிடம், ஒரு மோட்டார் இயக்குபவர் பணியிடம் மற்றும் இரண்டு குடிநீர் மேல்நிலைத் தொட்டி காவலர் பணியிடங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. பணியாளர்கள் பற்றாக்குறையால் குடிநீர் விநியோகம் மற்றும் குடிநீர் குழாய் பழுது நீக்கப் பணிகள் செய்வதில் காலதாமதம் ஏற்படுவதால் பொது மக்களிடம் இருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. அதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு கூடுதலாக இரண்டு நபர்கள் பணி அமர்த்திக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

இந்நகராட்சி குடிநீர் திட்ட அவசியத்தை கருத்தில் கொண்டு, சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீர் ஏற்று நிலையங்கள் பராமரிப்பு மற்றும் குடிநீர் குழாய்கள் பராமரிப்பு பணிகள் தொய்வின்றி தொடர்ந்து நடைபெறும் பொருட்டு இப்பணிகள் செய்ய ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏதுவாக 2020—21 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விலை விகித அட்டவணை வரிசை எண்.8(b) Pump operator without ITI பணிக்கு ஒரு நபருக்கு நாள் ஒன்றிற்கு ரூ.520/— வீதம் இரண்டு நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முறைப்படி (Out sourcing) 01.02.2021 முதல் 31.07.2022 வரை ஆறு மாதங்களுக்கு நிர்வாக செலவினம் 12 சதவீதம் உட்பட ரூ2,10,000/—க்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இந்நகராட்சி நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள அனுமதி கோரப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட சேதுக்கரை மற்றும் மாலாங்குண்டு குடிநீர் ஏற்று நிலையங்களில் உள்ள மோட்டார் இயக்குதல் மற்றும் குடிநீர் குழாய் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு இரண்டு நபர்களைக் கொண்டு வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) 01.02.2021 முதல் 31.07.2021 வரை ஆறு மாதங்களுக்கு பணி மேற்கொள்வதற்கும், அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் நகர்மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.728/2020/இ1)

அலுவலக குறிப்பு

1) குடிநீர் திட்டப்பணிகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் வெளிக் கொணர்வு முறைப்படி (Outsourcing method) பணிகள் செய்வதற்கு ஆறு மாதங்களுக்கு இரண்டு நபர்களை வழங்குவதற்கு இந்நகராட்சிப் பொறியாளர்களால் ரூ.2,10,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் பணிக்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.799 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 2

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோவிட்–19 பொது ஊரடங்கு காலத்தில் செயல்படாத குத்தகை இனங்களுக்கு 01.04.2020 முதல் 31.05.2020 வரை குத்தகை கேட்பினை தள்ளுபடி செய்வதற்கு அரசாணை எண் 298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 02.09.2020–ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின் படி கீழக்கரை நகராட்சி சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்கள் கேட்பினை தள்ளுபடி செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | குத்தகை இனங்கள விபரம் | எண்ணம் | 01.04.2020 முதல் 31.05.2020 வரையிலான கேட்பு தொகை |
|---|---|---|---|
| 1 | மீன் மார்கெட் கடைகள் | 33 | 51660 |
| 2 | பேருந்து நிலைய நில வாடகை கடைகள் | 16 | 5146 |
| 3 | இந்து பஜார் நில வாடகை கடைகள் | 15 | 20476 |
| 4 | ஐ.யூ.டி.பி கடைகள் | 9 | 37800 |
| 5 | எஸ்.டி.டி.பூத் | 1 | 2310 |
| 6 | தினசரி சந்தை | 1 | 40884 |
| 7 | ஆடு அடிக்கும் தொட்டி | 1 | 6422 |
| 8 | கட்டண கழிப்பறை | 1 | 16906 |
| 9 | பேருந்து நுழைவு கட்டணம் | 1 | 4300 |
| 10 | மீன் வெட்டும் குத்தகை உரிமம் | 1 | 6422 |
| | மொத்தம் | 79 | 192326 |

**(கோப்பு எண் 132/2016/எச்1)**

**அலுவலக குறிப்பு**

1. அரசாணை எண் 298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 02.09.2020–னை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. பட்டியலில் கண்டுள்ள குத்தகை இனங்களுக்கான 01.04.2020 முதல் 31.05.2020 வரை குத்தகை கேட்பு தொகை ரூ.192326/–னை தள்ளுபடி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.802 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் –3**

சிறப்பு சாலை திட்டம் 2020–21–ன் கீழ் சாலைப்பணிகளை மேற்கொள்ள 11.12.2020 அன்று அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் நடைபெற்ற சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21க்கான திட்ட அனுமதி வழங்கும் குழுவில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் சாலைப்பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு நகர் மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிவைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.20557/2020/இ3, நாள்.11.12.2020 ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) | சிறப்பு சாலைகள் திட்ட நிதி (ரூ.கோடியில்) | நகராட்சி பங்களிப்பு தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| கீழக்கரை | 1.00 | 0.90 | 0.10 |

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளதிற்கிணங்க, கீழ்க்காணும் விவரப்படியான சாலைப் பணிகள் மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளும் பொருட்டு நிர்வாக அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீ) | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 இரண்டு குறுக்குத் தெரு, வார்டு எண்.2 அன்புநகர் 2–வது குறுக்கு தெரு, வார்டு எண்.3 புதுகிழக்குத் தெரு, கிழக்குத் தெருவில் மூன்று குறுக்கு சாலை, பட்டாணியப்பா தர்ஹா 1, 2, 3 குறுக்கு சாலைகள், வார்டு எண்.6 ஒரு குறுக்கு சாலை, வார்டு எண்.10 சேரான் தெரு மற்றும் வார்டு எண்.12 ஜின்னா தெரு குறுக்கு சாலை ஆகிய பகுதிகளில் பேவர்கல் சாலைகள் அமைக்கும் பணி | 2.150 | 3.75 | 100.00 |

கோப்பு எண். 656/2020/இ1

அலுவலக குறிப்பு:

1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
2. மேற்காணும் திட்டத்தில் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் சாலைகள் அமைக்கும் பணிக்கு (சிறப்பு சாலை திட்ட நிதி 0.90 கோடி மற்றும் நகராட்சி பங்களிப்பு தொகை 0.10 கோடி) நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம் எண்.803அனுமதிக்கப்பட்டது.

## பொருள் –4

கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான பள்ளமோர்குளம் கிராமத்திற்குட்பட்ட சர்வே எண்.98/2 பகுதியில் (கிழக்கு கடற்கரை சாலை) அமைந்துள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு வளாகத்தில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி IUDM 2018-19 திட்டத்தின் கீழ் ரூ.340.00 இலட்சம் மதிப்பீட்டில் 20KLD கொள்ளளவு கொண்ட மனித கழிவு கசடு சுத்திகரிப்பு நிலையம் (Fecal Sludge Treatment Plant) அமைத்திட சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.26888/UGSS–2/2018–1 நாள்.11.12.2018–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.26888/2018/DO2, நாள்.11.12.2018–ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, மேற்படி பணிக்கு 14.11.2019–ம் தேதி மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரி 06.12.2019–ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி கட்டுமான பணிகளில் 25 சதவீத பணிகள் நடைபெற்றுள்ளது. பணிகள் விரைந்து முடித்து Fecal Sludge Treatment Plant (FSTP) இயக்கப்படவுள்ளதாலும், அதற்கான கசடுகழிவு மேலாண்மை துணை விதிகளுக்கு அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பிடவும், அனுமதி பெற்றவுடன் நாளிதழ் மற்றும் அரசிதழில் விளம்பரம் செய்திடவும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**[கோப்பு எண்.1022/ 2018/இ1]**

**அலுவலகக் குறிப்பு.**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.804அனுமதிக்கப்பட்டது.**

**ஒம்/–ஆ. தனலெட்சுமி,பி.காம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**